செ.வெ.எண்:26 நாள்:17.02.2020

## கரூர் மாவட்டம்

## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.02.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 287 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது அக்கரை கொண்டு அது அவர்களின் உணர்வின் வடிவமாக நினைத்து அவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் கனரா வித்யா ஜோதி திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் கனரா வங்கியின் கிளைகள் அமைத்துள்ள பகுதிகளில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த 5 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் பெண் குழந்தைகளில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரூ 2,02,500 ஊக்கத் தொகைகளையும்,மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ 75,000 மதிப்பில் மூன்று சக்கர மிதிவண்டிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி செல்வசுரபி, சமூக பாதுகப்பு திட்ட தனிதுணை ஆட்சியர் திரு.பாலசுப்ரமணியன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரெங்கராஜன், கலால் பிரிவு உதவி ஆணையர் திருமதி.மீனாட்சி, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**